**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குமாரபாளையம்**

**<u>அ.வ.எண்.348/2020</u>**

**நாள்– 27.03.2026**

**பி.வா.சா. 2 – <u>சசிகுமார்</u>**

**<u>குறுக்கு விசாரணை:</u>**

1) நான் 1ம் பிரதிவாதியின் மைத்துனர் என்றால் சரிதான். நான் 9ம் வகுப்பு வரை படித்துள்ளேன், கட்டிடத் தொழில் செய்து வருகிறேன். 1ம் பிரதிவாதியுடன் ஒன்றாக சேர்ந்து தொழில் செய்து வருகிறேன் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி எந்தக் கட்சியில் இருக்கிறார் என்றால் அது குறித்து தெரியவில்லை, தி.மு.க கட்சிக்காக உழைக்கிறார் என்றால் எனக்குத் தெரியாது. 1ம் பிரதிவாதி கொடுத்த வாக்குமூலம் மற்றும் குறுக்கு விசாரணை விவரங்கள் எனக்குத் தெரியும் என்றால் தெரியும். 1ம் பிரதிவாதி கொடுத்த வாக்குமூலத்தில் உள்ள விட்டுப்போன மற்றும் மாறிப் போன விவரங்களை தருவதற்காக நான் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரிதான். எனது தாய் பிறந்து வளர்ந்த ஊர் ரங்கனூர் என்றால் சரிதான். எனது தந்தை பிறந்து வளர்ந்த ஊர் நல்லாம்பாளையம் என்றால் சரிதான். எனது தாயை திருமணம் செய்த பின்னிட்டு எனது தந்தை ரங்கனூரில் வசித்து வருகிறார் என்றால் சரிதான். நான் பிறந்து வளர்ந்தது ரங்கனூர் என்றால் சரிதான்.

2) ரங்கனூரில் எத்தனை கோவில்கள் உள்ளன என்ற விவரம் எனக்குத் தெரியும் என்றால் தெரியும். தாவா கோவிலைச் சுற்றி காலியிடங்கள் உண்டு என்று எனது முதல் விசாரணையில் கூறி உள்ள நிலையில் மேற்படி காலியிடத்தின் விஸ்தீரணம் மற்றும் நீள அகலம் எவ்வளவு என்றால் எனக்குத் தெரியாது.

**(வாதிகள் தரப்பு வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது)**